# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

## <u>ஆணை நாள். 12.05.2026</u>

## <u>முன்னிலை</u>
## திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)
## மாநில தகவல் ஆணையர்

*****

**<u>வழக்கு எண்கள். SA 9190/F/2024 & SA 10929/F/2024</u>**

திரு.சி.காசிராஜன், -- மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர் /
மேற்பார்வையாளர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், -- பொது அதிகார அமைப்பு
புதுக்கோட்டை மாவட்டம்-622 003.

## <u>ஆணை</u>

இவ்வழக்குகளின் மீது இவ்வாணையத்தில் இன்று (12.05.2026) முற்பகலில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணைக்கு மனுதாரர் திரு.சி.காசிராஜன், அவர்கள் ஆணையத்தின் முன் நேரில் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக பொதுத் தகவல் அலுவலர் திரு.க.பாண்டீஸ்வரன், மேற்பார்வையாளர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், புதுக்கோட்டை மாவட்டம்-622 003 அவர்கள் ஆணையத்தின் முன் நேரில் ஆஜரானார்.

2. மனுதாரர் 11.04.2024 (ம) 14.04.2024 ஆகிய வெவ்வேறு தேதிகளிட்டு ஒரே பொருண்மை உள்ள இரண்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுக்களில், " புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் தாலுகா, மாத்தூர் கிராமத்தில் சாய்பாபா நகர் என்ற பெயரில் Thiru.Deputy Director of Town and Country Planning, Sivagangai IN Map No.LP/R(RP) No.27/4 and letter order ROC No.1628/84 RP3, dated 05.05-ல் திட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது/ இல்லையா என்பதன் தகவல்கள் (ம) ஆவணங்கள் வழங்குமாறு வேண்டுகிறேன்" என்பன போன்ற தகவல்களை 9 இனங்களில் வழங்கக் கோரி பொதுத் தகவல் அலுவலர்/ மேற்பார்வையாளர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், சிவகங்கை மாவட்டம்-630 562 அவர்களுக்கு மனுக்களை தாக்கல் செய்துள்ளார்.

3. அம்மனுக்களைப் பெற்ற பொதுத் தகவல் அலுவலர்/மேற்பார்வையாளர், மாவட்ட நகர்ஊரமைப்பு அலுவலகம், திருக்கோகர்ணம் அஞ்சல், புதுக்கோட்டை மாவட்டம்-622 003 அவர்கள் ந.க.எண்.374/2024புமா-3, நாள் 26.04.2024 தேதியிட்ட கடிதங்களின் வாயிலாக மனுதாரருக்கு இனம் வாரியாக தகவல்கள் வழங்கியுள்ளார். மனுதாரர் பொதுத் தகவல் அலுவலரிடமிருந்து முழுமையான தகவல்கள் வழங்காத காரணத்தால் 13.05.2024 தேதியிட்டு பிரிவு 19(1)-ன் கீழ் முதல் மேல்முறையீட்டு மனுக்களை தாக்கல் செய்துள்ளார். அம்மேல்முறையீட்டு மனுக்களை பெற்ற மேல்முறையீட்டு அலுவலர்/ துணை இயக்குநர்(பொ), மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருக்கோகர்ணம் அஞ்சல், புதுக்கோட்டை மாவட்டம்-622 003 அவர்கள் ந.க.எண்.374/2024புமா-3, நாள் 04.06.2024 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு தகவல்கள் வழங்கியுள்ளார். அதன் பின்னர் மனுதாரர் மேல்முறையீட்டு அலுவலரிடமிருந்தும் முழுமையான தகவல்கள் கிடைக்கப்பெறாத காரணத்தால், 10.07.2024 தேதியிட்டு பிரிவு 19(3) இன் கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனுக்களை இவ்வாணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். அவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுக்களின் அடிப்படையில் இவ்வழக்கு 12.05.2026 முற்பகல் இவ்வாணையத்தில் வைத்து நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணைக்கு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மனுதாரர் கோரிய தகவல்கள் குறித்து ந.க.எண்.425/2024/புமா, நாள் 14.05.2024 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாகவும், மேல்முறையீட்டு அலுவலரால் ந.க.எண்.425/2024/புமா, நாள் 16.07.2024 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாகவும் மனுதாரருக்கு இனம் வாரியாக தகவல்கள் ஒப்புகை அட்டையுடன்கூடிய பதிவஞ்சலில் தகவல்கள் அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவித்து அதன் நகலை இணைத்து ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

5. இன்றைய விசாரணைக்கு ஆஜரான மனுதாரர் தனக்கு பொது அதிகார அமைப்பால் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும், அவ்வாறு வழங்கப்பட்டுள்ள முழுமையற்ற தகவல்களாக வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து தனக்கு உரிய தகவல்களை பெற்றுத் தருமாறு ஆணையத்திடம் முறையிட்டார்.

6. இன்றைய விசாரணையின் முடிவில், மனுதாரர் கோரிய தகவல்கள், அவருக்கு பொது அதிகார அமைப்பால் வழங்கப்பட்ட தகவல்கள் ஆகியவற்றை ஆணையம் பரிசீலனை செய்கையில், மனுதாரருக்கு உரிய தகவல்கள் பொது அதிகார அமைப்பால் வழங்கப்படவில்லை என்பதை இவ்வாணையம் பதிவு செய்து, பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் கீழ்க்கண்ட உத்தரவினைப் பிறப்பிக்கின்றது.

- ***மனுதாரர் 6(1) மனுவில் கோரியுள்ள அனைத்து இனங்களுக்கும் சரியான / திருத்திய தகவல்களை மனுதாரருக்கு "தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 இன் படி இத்தகவல்கள் வழங்கப்படுகிறது" என்ற முத்திரையுடன் பொதுத் தகவல் அலுவலர் உரிய சான்றொப்பமிட்டு இவ்வாணை கிடைக்கப்பெற்ற ஒரு வார காலத்திற்குள் விரைவஞ்சலில் சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி மனுதாரருக்கு தகவல்களை அனுப்பிவைத்து விட்டு அதன் பின்னர், மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் அவருக்கு வழங்கப்பட்ட தகவலின் நகல் மற்றும் மனுதாரருக்கு அனுப்பி வைத்த கடிதத்தின் அஞ்சல்***

*கண்காணிப்பு சான்றின் நகல் (Proof of Postal Tracking) ஆகியவற்றினை இணைத்து ஒரு அறிக்கையாகத் தயாரித்து இவ்வாணையத்திற்கு 17.06.2026 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு தற்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் உத்தரவிடப்படுகின்றது.*

**ஒம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

**ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண்கள். SA 9190/F/2024 & SA 10929/F/2024</u>**
**பெறுநர்**
**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர் /
மேற்பார்வையாளர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
புதுக்கோட்டை மாவட்டம்-622 003.

**<u>மனுதாரர்</u>**

திரு.சி.காசிராஜன்,
க.எண்.604-1, சிதம்பரம் நகர்,
குளத்தூர் தாலுகா,
மாத்தூர் கிராமம் (ம) அஞ்சல்,
புதுக்கோட்டை மாவட்டம்-622 515.

Copy to: File NS/PA-